198. மார்ச் 30]

மருதையாற்றின் உபநதியான அண்ணபாண்டிவாரி ஓடையின் குறுக்கே கட ஊர் கிராமத்திற்கு அருகில் (பெரம்ப ஊர் வட்டம்) நீர்த்தேக்கம் அமைத்தல். திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 144 இலட்சங்கள். புதிய புன்செய் பரப்பு சுமார் 1,556 ஏக்கர் பயனடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பெரம்பலூர் வட்டம், தாத்தையயாகுளம் கிராமத்திற்கு அருகில் மருதையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 380 இலட்சங்கள். சுமார் 6,350 ஏக்கர் புதிய பரப்பு (புன்செய் நிலங்கள்) பாசனம் பெறும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒன்று மட்டும் மூன்று திட்டங்கள் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளன. இரண்டாவது திட்டத்திற்காக மதிப்பீடு இறுதியாக்கப்பட்டு வருகிறது என்ற தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு த. ஆறுமுகம்: கட ஊர் என்று சொன்னார்கள். அது கூட ஊர். கூட ஊருக்கு அருகில் அணையைக்கட்ட அந்தக்கிராமத்தில் எங்களுக்கு இந்த அணை தேவை இல்லை. வேண்டாம் என்று சொல்கிறார்கள். ஆகவே அரிய ஊர் அருகில் வதையாங் குளத்தின் பக்கத்தில் கட்டினால் அந்தப் பகுதியில் உள்ள பல கிராமங்களுக்கு பாசனவசதி கிடைக்க ஏதுவாகும். எனவே அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ரே. இராஜா முமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தாத்தையாகுளம் பக்கத்தில்கட்டுவதற்கான கருத்துரு பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இரண்டாவது திட்டத்தை அங்குள்ள பொதுமக்கள் ஆட்சேபிக்கிறார்கள் என்று குறிப்பு என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபிறகு அதைப் பற்றி விசாரிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட மூன்றாவது திட்டம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

மடிச்சல் கிளைக் கால்வாய் வெட்டும் பணி.

*வினா எண் 556—திரு பொ. விஜயராகவன் மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர்: கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யாறு இடதுகரைகால் வாயில் மடிச்சல்—கிளை கால்வாய் வெட்டப்பட வேண்டிய கோரிக்கை மீது அரசு என்ன முடிவு எடுத்துள்ளது ?

(ஆ) அக்கால்வாயை வெட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்காக அரசு நவம்பர் 1978-ல் ரூ. 18·10 லட்சம் அனுமதி அளித்தது. ஆனால், கேரள அரசுடன் இம்மாநில அரசு செய்துக் கொண்ட ஒப்பந்தப்படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் கொடுப்பதற்கு பதிலாக தற்போது வினாடிக்கு 50 விழுக்காடு தண்ணீர்தான் கேரள அரசு நய்யாறு அணையிலிருந்து கொடுக்கிறது. மேலும் ஆயக் கட்டுதாரர்கள் போதிய தண்ணீர் கிடைக்காததால் தங்கள் நிலங்ளை மேம்படுத்த முன்வரவில்லை. ஆகையால் இது பற்றி மறு ஆய்வு செய்து, ஒப்பந்தப்படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் உறுதியாகக் கிடைக்கும் வரை இத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு செய்து கொண்ட ஒப்பந்தப்படி பாசனத்திற்கு 150 கன அடி தண்ணீர் கிடைக்க இப்போது என்ன நடவடிக்கையைஇந்த அரசு மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது தலைவர் அவர்களே, ஒப்பந்தப்படி தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று 2, 3 முறை பேச்சு வார்த்தைகள் மூலமாக சம்மந்தப்பட்ட பாச னத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கடிதம் மூலமாகவும் வலியுறுத்தி வருகிறோம். இப்போது சமீபத்தில் நமது முதலமைச்சர் அவர்களும், கேரள முதலமைச்சர் அவர்களும் நடத்திய பேச்சுவார்த்தையை ஒட்டி கூட இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்து பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கிறது. எனவே, இதை விரைவிலே நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையை இந்த அரசு வைத்திருக்கிறது.

திரு டி. மணி பேரவைத்தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அதாவது நெய்யாறு— இடதுகரை கால்வாய் திட்டத்தை ஆரம்பிக்கிறபோது, அது முழுமையாக ஆய்வு நடத் தப்பெற்று, அதன் அடிப்படையில் மடிச்சல் கிளைக்கால்வாய் திட்டம் போடப்பட்டது. அது 72, 73 ஆம் ஆண்டு காலக் கட்டத்தில் சீராக வெட்டப்பட்டு, அப்போது தண்ணீர் விடப் பட்டது. அது மட்டுமல்ல. 80 அல்லது 70 கன அடி தண்ணீர் வருகின்ற போது, முறையாக மெயின் கால்வாய் வெட்டப் படாததால் ஒரு பகுதி தண்ணீர் ஓவர்-புளோ ஆகி வெளியேறு கிறது. இப்படி பல்வேறு காரணங்களைக் கொண்டுதான், அந்த தண்ணீர் விடுகின்ற ஏற்பாட்டிலே சில முறைகேடுகள் ஏற்பட்டது. ஏற்கனவே, இவைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு, ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சொன்னபடி கேரள மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் விளைவாகவும், ஏற்கனவே நான் கேட்டுக்கொண்டதற் கிணங்கவும்—எனக்கு ஒரு கடிதம் அந்த மாநில அரசிட மிருந்து வந்திருக்கிறது. அதிலே குறிப்பாக 100 கன அடி

தண்ணீர் தரயிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்த நிதி ஆண்டு அந்த மடிச்சல் கால்வாயை வெட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேரள அரசோடு தொடர்பு கொண்ட அந்தக் கடிதத்தின் நகலை என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். அதுகுறித்து உடனடியாக பரிசீலித்து, 15 நாட்களுக்குள் தகவல் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அது வந்ததற்குப் பிறகு, இதிலே விரைவான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்தத் திட்டம் வருமென்று எதிர்பார்த்து ஏமாந்ததற்குக் காரணம், இவ்வளவு காலதாமதம் ஆனதுதான். இது இரண்டு மாநிலங்களுடைய தொடர்புடையதாக இருப்பதால், மத்திய அரசின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் — மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். இது இரண்டு மாநிலங்கள் தொடர்புடைய காரணத்தினாலே மத்திய அரசு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட வேண்டுமென்று நமது மாநில அரசாங்கம் கேட்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இரண்டு மாநிலங்களின் பிரச்சினை என்பதற்காக, மத்திய அரசிடம் கேட்க வேண்டுமென்ற ஒரு கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. கணவன்–மனைவி சண்டை ஏற்பட்டால், தேவைப்படுகின்றபோது, மாமியார் வரலாமே தவிர, ஒவ்வொரு விஷயத்திற்கும் மாமியார் வரக்கூடாது. இரண்டு மாநிலங்களுக்கிடையே நல்லமுறையிலே பேச்சுவார்த்தைகள் நடந்து வருகிறது. அது முடிந்துவிடுமென்ற நம்பிக்கை இருக்கிறது. நம்பிக்கை வெற்றி பெறுமென்று நாம் நம்புவோமாக.

கோமுகி அணையில் தூர் எடுக்கும் பணி

*வினா எண். 557— திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோமுகி அணை தூர்ந்துபோய் தண்ணீர் கொள்ளளவு குறைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் தூர் எடுக்கும் டணி விரைவில் துவக்கப்படுமா?